

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 345 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 10 – ஞாயிற்றுக்கிழமை 26 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 345 : Thiruvalluvar Year - 2057 - Aadi 10 - Sunday 26 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## பல்லாயிரக்கணக்கில் மாணவர்கள் திரண்டனர்!

# தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டம் தீவிரம்!

## புதுடெல்லியில் இணையதள சேவை முடக்கம் - மோடி அரசுக்கு எதிராக கண்டன முழக்கம்!

**புதுடெல்லி, ஜூலை 26–**

**இந்தியா முழுவதும் பல்லாயிரக்கணக்கில் மாணவர்கள் திரண்டனர். தமிழ்நாட்டிலும் நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்கள் களத்தில் இறங்கி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**

**புதுடெல்லியில் நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் வலுத்து வருவதால் அடுத்த இரண்டு தினங்களுக்கு, நகர் முழுவதும் இணையதள சேவையை முடக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.**

நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளில் நடைபெற்ற வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூன் 21ஆம் தேதி முதல் டெல்லி ஜந்தர் மந்தரில் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். ஏராளமான இளைஞர்கள் மோடி அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி வருகின்றனர்.

நேற்று 35வது நாளாக நீடிக்கும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஜந்தர் மந்தரில், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் குவிந்து வருகின்றனர். இன்றும் நாளையும் விடுமுறை தினம் என்பதால் போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்பார்கள் என்பதால் டெல்லி நகரம் முழுவதும் இணையதளச் சேவை முடக்கப்பட்டுள்ளது. போராட்டம் நடைபெறும் பகுதிகளில் ஏராளமான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளதால் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

### மாணவர் போராட்டத்தை தடுக்கும் த.வெ.க. அரசு!

இதனிடையே, மாணவர்களின் போராட்டத்திற்கு அஞ்சி, மெரினாவை 2வது நாளாக த.வெ.க. அரசு மூடிவைத்துள்ளது. மெரினாவில் மாணவர்கள் போராட்டம் நடத்த வாய்ப்புள்ளதால், அதனை தடுக்கும் நோக்கில், த.வெ.க. அரசு காவல்துறையை குவித்து வைத்துள்ளது. கடற்கரைக்கு வருபவர்கள் தீவிர சோதனைக்கு பிறகே காவல்துறையினர் அனுமதித்து வருகின்றனர்.





மேலும், சென்னை, மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நீட்டுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். மாணவர்களின் போராட்டத்தை த.வெ.க. அரசின் காவல்துறை தடுத்து வருகிறது.

### உளுந்தூர் பேட்டையில் மாணவரணி – இளைஞர் அணியினர் ஆர்ப்பாட்டம்!

நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி உளுந்தூர் பேட்டையில் நேற்று சாலை மறியலில் ஈடுபட்ட திமுக மாணவரணி மற்றும் இளைஞரணியினர் 50க்கும் மேற்பட்டோரை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கி கைது செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது. நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும், டெல்லியில் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்தர் பிரதான் உடனே பதவி விலக வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகில் நேற்று முன்தினம் தி.மு.க. மாணவரணி மற்றும் இளைஞரணி சார்பில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.





தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த உளுந்தூர்பேட்டை போலீசார் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட திமுகவினரை கலைந்து செல்லுமாறு கூறினர். ஆனால் அதை ஏற்க மறுத்த தி.மு.க.வினர் போராட்டத்தை தொடர்ந்த நிலையில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் குருராஜ், இளைஞரணி அமைப்பாளர்கள் முருகவேல், மனோபாலன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோரை போலீசார் குண்டுக்கட்டாக கைது செய்து வேன்களில் ஏற்றி தனியார் மண்டபத்தில் அடைத்தனர். இதே போன்று தமிழகம் முழுவதும் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி கரப்பான் பூச்சி இயக்கத்தினர் பல்வேறு மாணவர் அணி அமைப்புகள் பேராட்டங்களை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் வகுப்புகளைப் புறக்கணித்து உண்ணாவிரதம், உள்ளிருப்புப் போராட்டம், ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தி, கல்வி உரிமையைப் பாதுகாக்க வலியுறுத்தினர்.

### லயோலா கல்லூரியில் ஆர்ப்பாட்டம்!

இந்த நிலையில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியின் இதழியல் மற்றும் தமிழ்த்துறை மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் தெருக்கூத்து நிகழ்ச்சியை நடத்தி தங்களது எதிர்ப்பை வலுவாகப் பதிவு செய்தனர். தெருக்கூத்து மற்றும் நாடக வடிவில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், நீட் தேர்வு மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் கொள்கை என்றும், அதற்கு எதிராக போராடிய மாணவர்கள் மீது ஒன்றிய பாஜக அரசு மேற்கொண்ட அடக்குமுறை ஜனநாயக விரோதமானது என்றும் மாணவர்கள் சாடினர்.

மேலும், தமிழ்நாட்டில் மாணவர்களின் கோரிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்காமல், கல்வி உரிமை, சமூகநீதி, மாநில உரிமைகள் போன்ற விவகாரங்களில் மவுனம் காக்கும் த.வெ.க. அரசின் செயல்பாடுகளுக்கும் மாணவர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். சமூகநீதி மற்றும் கல்வி உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, ஒன்றிய பாஜக அரசையும் த.வெ.க. அரசையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். மாணவர்களின் இந்தப் போராட்டம் கல்லூரி வளாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், நீட் எதிர்ப்பு குரல் தமிழகம் முழுவதும் மேலும் தீவிரமடைந்து வருவதை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

### சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

இதேபோல் சென்னை, மாநில கல்லூரியின் இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த (SFI) மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த இந்திய மாணவர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சம்சீர் அஹமத், “30 நாட்களுக்கும் மேலாக டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் மாணவர்களின் நீட்டுக்கு எதிரான போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த போராட்டத்தின் விளைவாக நேற்று நள்ளிரவில் பிரதமர் மோடி ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அவருடைய இந்த அறிவிப்பில் எங்களுக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை. அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும். இன்று முதல் மாநில கல்லூரியில் வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் தொடங்கியுள்ளது” என தெரிவித்தார்.

மேலும், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகேயும் இந்திய மாணவர் சங்கம் மற்றும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் காலவரையற்ற தொடர் போராட்டம் தொடங்கி உள்ளது. இந்த போராட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்துக் கொண்டு நீட் தேர்வுக்கு எதிரான கோஷங்களையும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கும் எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

---

## ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்துகள் மதிக்கப்பட வேண்டும்!

# அரசை விமர்சிப்பது குற்றமாகாது - அவதூறு வழக்கில் கைது செய்யக் கூடாது!

## சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

*சென்னை, ஜூலை 26-*

பழனி முருகன் கோவிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான நிலம், ரூ.2 கோடிக்கு முறைகேடாக விற்றது தொடர்பான செய்தியைசமூகவலைதளத்தில் பகிர்ந்து கேள்வி எழுப்பிய இளைஞர் வினோத் சூர்யா மீது அறநிலையத் துறைஅமைச்சர்எஸ்.ரமேஷ் அவர்களுக்கு எதிராய் அவதூறுபரப்பினார்எனபொய் வழக்குபதிந்துகைதுசெய்திருந்ததுத.வெ.க.அரசு. இந்த வழக்கில் நேற்று இளைஞர் வினோத்சூர்யாவிற்குநிபந்தனை ஜாமீன் வழங்கி சென்னைமுதன்மைஅமர்வு நீதிமன்றம்அதிரடிஉத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜாமீன்வழங்கக்கூடாது என அரசுத் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையும், அவரைக் காவலில் எடுத்துவிசாரிக்கவேண்டும் என்று வலியுறுத்தியதையும் மாண்பமைநீதிமன்றம்நிராகரித்து விட்டது.

மேலும் மாண்பமை நீதியரசர் தனது உத்தரவில் “பத்திரிகைத் துறையானது ஜனநாயகத்தின்4வதுதூணாகத் திகழ்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 19(1)(a)ன்கீழ்உத்தரவாதம் அளிக்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்து சுதந்திர உரிமையின் அடிப்படையிலேயே செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. ஜனநாயகத்தில் மாற்றுக்கருத்துகள்மதிக்கப்பட வேண்டும். வெறுமனே அரசையோஅல்லதுஅமைச்சர்களையோ விமர்சிப்பது மட்டுமே அரசுக்கு எதிராகவும் அல்லது பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும் செய்யப்பட்ட குற்றமாகாது” என தெளிவாகக் குறிப்பிட்டது.

த.வெ.க. அரசின் ஜனநாயகவிரோத போக்கினை கண்டிப்பதாக அமைந்துள்ளது.

மேலும் வினோத்சூர்யாவின் பதிவு சமூக மோதலை தூண்டுவதாக உள்ளது என காவல்துறையால் பதியப்பட்ட பிரிவுகள் பொருந்தாது என உத்தரவிட்டுள்ளது. மேலும் இது காவல்துறையால் நேரடியாககைது செய்ய முடியாத குற்றமாகும்எனகுறிப்பிட்டு நிபந்தனை ஜாமீன் வழங்கியது மூலம் அரசை விமர்சிப்பவர்களை ஆணவப் போக்கோடு கைது செய்யும் த.வெ.க. அரசிற்கு குட்டு வைத்துள்ளது நீதிமன்றம்.

---

## சூரியசக்தி, காற்றாலை மின் திட்ட விண்ணப்பங்கள் நிறுத்தம்

# த.வெ.க. ஆட்சியின் அலட்சியத்தால் முதலீட்டாளர்கள் அதிருப்தி!

## வேறு மாநிலங்களுக்கு முதலீட்டாளர்கள் மாறும் அவலம்!

*சென்னை, ஜூலை 26-*

த.வெ.க. அரசு புதிய தொழில் முதலீட்டாளர்களுக்குத் தேவையான கொள்கை நிலைத்தன்மையை வழங்கத் தவறியதால், தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய பல கோடிக் கணக்கான தொழில் திட்டங்கள், அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதாக குற்றச்சாட்டு கள் எழுந்து வருகின்றன. இந்த நிலையில், சூரியசக்தி, காற்றாலை மின்சக்தியை உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்களுக்கு விண்ணப்பம் பெறுவது இரு மாதங்களாக த.வெ.க. அரசு நிறுத்தியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. மேலும், ‘ஆன்லைன்’ வாயிலாக விண்ணப்பம் பெறும் சேவையை தொடங்கவும் மின் வாரியம் தாமதம் செய்வதாகவும் கூறப் படுகிறது. இந்த தாமதம் காரணமாக, அதிருப்தி அடைந்துள்ள முதலீட்டாளர்கள், குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

## நீட், மேகதாது பிரச்சினை - நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியது தி.மு.க.!

# கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மீதான தாக்குதலுக்கும் கண்டனம்!

## தொடர் அமளியால் நாடாளுமன்றம் 5-வது நாளாக முடங்கியது!

*புதுடெல்லி, ஜூலை 26-*

நீட், மேகதாது விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளால் நாடாளுமன்ற இரு அவைகளும் 5வது நாளாக நேற்றும் முடங்கின. மக்களவை நாள்முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை நேற்று காலை கூடியதும், நீட் மற்றும் மேகதாது பிரச்சினை குறித்து அளிக்கப்பட்ட நோட்டீஸ் மீது அவையை ஒத்திவைத்து, விவாதம் நடத்த வலியுறுத்தி தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அவையின் மையப்பகுதிக்கு சென்று முழக்கங்களை எழுப்பினர்.

இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை தொடங்கிய ஒரு நிமிடத்துக்குள்ளாகவே நண்பகல் 12மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால், மக்களவை நாள்முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோல், மாநிலங்களவையிலும் நீட், மேகதாது பிரச்சினை மற்றும் மாணவர்கள் மீதான தாக்குதல் விவகாரங்கள் எதிரொலித்தன. இவ்விவகாரங்கள் குறித்த விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். இதனை ஏற்க அவைத் தலைவர் மறுத்ததைக் கண்டித்து அவையில் முழக்கம் எழுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாநிலங்களவையும் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடிய போதும் அமளி நீடித்ததால் மாநிலங்களவை இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

